දුරකථන අංක தொலைபேசி இல./Telephone Nos.

Minister
Secretary
Office Fax

E-mail

ඔබේ අංකය
உமது இல.
Your No.

අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி அமைச்சு
Ministry of Education

"Isurupaya", Sri Jayawardenepura Kotte, Battaramulla

මගේ අංකය
எனது இல.
My No. ED/07/99/01/50

දිනය
திகதி
Date 2012.09.19

## பாடசாலைக் கட்டடங்கள் சுற்றறிக்கை இல. 01/2012

சகல தேசிய பாடசாலைகளின் அதிபர்களுக்கும்,

## நாட்டின் தேசிய பாடசாலைக் கட்டடமொன்றைத் தகர்த்து அகற்ற நேரிடும் சந்தர்ப்பத்தில் பின்பற்றி ஒழுகவேண்டிய நடைமுறை

பாடசாலையில் பயன்பாட்டுக்குப் பெறமுடியாத நிலையிலுள்ள பழுதடைந்த ஒரு கட்டடத்தைத் தகர்த்து அகற்றும்போது அல்லது புதியதொரு கட்டடத்தை அமைப்பதற்கு இடவசதி பெற்றுக்கொள்ள ஒரு கட்டடத்தையோ அல்லது அதன் ஒரு பகுதியையோ தகர்த்து அகற்றும்போது பின்வரும் நடைமுறை பின்பற்றி ஒழுகப்பட வேண்டும் என்பதை தயவுடன் அறியத் தருகின்றேன்.

அ. இச்சுற்றறிக்கையுடன் இணைக்கப்பட்டுள்ள 'பழுதடைந்த கட்டடத்தைத் தகர்த்து அகற்றுவது குறித்த தகுநிலை அறிக்கையை' (இணைப்பு I) பூர்த்திசெய்து கல்வி அமைச்சில் சமர்ப்பித்தல் வேண்டும். அவ்வேளையில், இணைப்பு I அறிக்கையின் பகுதி I இல் குறித்துரைக்கப்பட்டுள்ள தகவல்களை பாடசாலை அதிபர் முதலில் வலயக் கல்விப் பணிப்பாளரிடம் சமர்ப்பித்தல் வேண்டும்.

ஆ. அதிபரினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களை வலயக் கல்விப் பணிப்பாளர் பரீட்சித்து அது தொடர்பாக இணைப்பு I இலுள்ள பகுதி II ஐப் பூர்த்திசெய்து அவரது சிபார்சை பொறியியலாளரிடம் சமர்ப்பித்தல் வேண்டும்.

இ. அதிபரினதும் வலயக் கல்விப் பணிப்பாளரினதும் சிபார்சுகளையும் கருத்திற்கொண்டு ஏற்புடையவாறு பிரதேசத்தின் பாடசாலைக் கட்டடங்கள் பொறியியலாளர் அல்லது மாவட்டப் பொறியியலாளர் (பாடசாலைக் கட்டடங்கள்) அல்லது பிரதேச பொறியியலாளர், கட்டடத்தின் நிலை தொடர்பாக இணைப்பு I இலுள்ள பகுதி III ஐப் பூர்த்திசெய்து அவரது சிபார்சை மாகாணக் கல்விப் பணிப்பாளரிடம் சமர்ப்பித்தல் வேண்டும். பொறியியலாளர் கட்டடத்தைத் தகர்த்து அகற்றுவதற்கு சிபார்சு செய்வாராயின், அதில்;

i. பொறியியலாளரின் தகுநிலை அறிக்கை.
ii. கட்டடத்தைத் தகர்த்து அகற்றுவதற்குச் செலவாகும் தொகை அடங்கிய மதிப்பீடு.
iii. கட்டடப் பொருள்களின் மதிப்பீடு.
iv. பாடசாலை வளவில் கட்டடம் அமைந்திருப்பதைக் காட்டும் மாதிரி வரைபடம்.

ஆகிய தகவல்கள் கட்டாயமாக உள்ளடக்கப்படல் வேண்டும்.

4. மாகாணக் கல்விப் பணிப்பாளர் மேலே ஆ, இ, ஈ சிபார்சுகளையும் கருத்திற்கொண்டு இணைப்பு I இலுள்ள பகுதி IV ஐப் பூர்த்திசெய்து அவரது சிபார்சை கல்விச் செயலாளருக்கு வழங்க வேண்டும்

அதன்படி, எதிர்காலத்தில் என்னிடம் சமர்ப்பிக்கப்படும் கட்டடங்களைத் தகர்த்து அகற்றுவதற்கான அனுமதி கோரல்களை இவ்வறிவுறுத்தல்களின்படி சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்குமாறு தயவுடன் அறியத் தருகின்றேன். அதற்கு மாற்றமாக முன்வைக்கப்படும் கோரிக்கைகள் கருத்திற் கொள்ளப்பட மாட்டாது என்பதையும் மேலும் தயவுடன் அறியத் தருகின்றேன்.

எஸ்.எம்.கோட்டாபய ஜயரத்ன
செயலாளர்
கல்வி அமைச்சு

<u>பிரதிகள்:</u>

1. பிரதி பிரதம செயலாளர் (பொறியியல் சேவைகள்)
   தென் மாகாணம்/ மேல் மாகாணம்/ சப்ரகமுவ மாகாணம்
2. பணிப்பாளர் (பொறியியல் சேவைகள்) – வடமேல் மாகாணம்

   } தயவுசெய்து, இதன்படி தங்கள் மாகாணத்தின் பொறியியலாளர்களை அறிவுறுத்துமாறு வேண்டுவதற்காக.

3. பாடசாலைக் கட்டடங்கள் பணிப்பாளர் – வட மாகாணம்/ கிழக்கு மாகாணம் — தயவுடன் தகவலுக்கும் அவசிய நடவடிக்கைக்கும்.

4. சகல மாகாணக் கல்விப் பணிப்பாளர்கள் – தயவுசெய்து இதன்படி தங்கள் மாகாணத்தின் வலயக் கல்விப் பணிப்பாளர்களையும் அறிவுறுத்தி அவசிய நடவடிக்கை எடுப்பதற்காக.

5. பிரதிப் பணிப்பாளர் (பா.க) – மத்திய மாகாணம்
6. பொறியியலாளர் (பா.க.) – வட மத்திய மாகாணம்
   ஊவா மாகாணம்

   } தயவுடன் தகவலுக்கும் அவசிய நடவடிக்கைக்கும்.

# பழுதடைந்த கட்டடத்தைத் தகர்த்து அகற்றுவது குறித்த தகுநிலை அறிக்கை

இவ்வறிக்கையில் பகுதி I பாடசாலை அதிபரினாலும், பகுதி II வலயக் கல்விப் பணிப்பாளரினாலும், பகுதி III ஏற்புடையவாறு பிரதேசத்தின் பாடசாலை கட்டடங்கள் பொறியியலாளரினாலும் அல்லது மாவட்டப் பொறியியலாளரினாலும் பாடசாலைக் கட்டடங்கள் அல்லது பிரதேச பொறியியலாளரினாலும் பகுதி IV மாகாணக் கல்விப் பணிப்பாளரினாலும் பூர்த்திசெய்யப்பட்டு கல்விச் செயலாளருக்கு வழங்கப்படல் வேண்டும்.

## பகுதி I: அதிபரின் அறிக்கை

1. பாடசாலையும் அதன் அமைவிடமும்:

1.1 பாடசாலையின் பெயர்: ..............................................................................

1.2 கல்வி வலயம்: ..............................................................................

1.3 கல்வி வட்டாரம்: ..............................................................................

1.4 பிரதேச செயலாளர் பிரிவு: ..............................................................................

1.5 இவ்வருடத்தின் மொத்த மாணாக்கர் எண்ணிக்கை: ..............................................

2. தகர்த்து அகற்றப்படவுள்ள கட்டடம் பற்றிய தகவல்கள்:

2.1 கட்டடத்தின் தன்மை:

..............................................................................

..............................................................................

2.2 கட்டடத்தின் விஸ்தீரணம்:

நீளம் ..............................

அகலம் ..............................

மாடிகளின் எண்ணிக்கை ..............................

2.3 அத்திவாரத்தின் தன்மை:

..............................................................................

..............................................................................

2.4 சுவர்களின் நிலையும் அதனைக் கட்டுவதற்குப் பயன்படுத்தப்பட்டுள்ள பொருள்கள் பற்றிய விபரமும்:

..............................................................................

..............................................................................

..............................................................................

2.5 கூரையின் நிலையும் அது அமைக்கப்பட்டுள்ள பொருள்கள் பற்றிய விபரமும்:

..............................................................................

..............................................................................

..............................................................................

..............................................................................

2.6 கட்டடத்தின் ஆயுட்காலம் (அண்ணளவான வருடங்கள்)

..............................................................................

3. இக்கட்டடம் தகர்க்கப்படுவதற்கான காரணம்

..........................................................................................................................................

..........................................................................................................................................

..........................................................................................................................................

4. இக்கட்டடம் தகர்க்கப்படுவதற்கான காரணம் புதியதொரு கட்டடத்தை நிர்மாணிப்பதாகவிருப்பின்,

4.1 சம்பந்தப்பட்ட புதிய கட்டடத்தை அமைப்பதற்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளதா?

..........................................................................................................................................

4.2 அவ்வாறாயின், அக்கட்டடத்தின் நீளமும் அகலமும் மாடிகளின் எண்ணிக்கையும்

..........................................................................................................................................

4.3 அக்கட்டடத்தின் வகை (அதாவது வகுப்பறைக் கட்டடம், ஆய்வுகூடம் என்றவாறு)

..........................................................................................................................................

..........................................................................................................................................

4.4 அக்கட்டடத்தை நிர்மாணிக்க நிதியீட்டம்செய்யும் நிறுவனம்/கருத்திட்டம்:

..........................................................................................................................

..........................................................................................................................................

5. அக்கட்டடத்தைத் தகர்த்துவிடுவதன் காரணமாக மாணாக்கரின் கல்விக்கு தடங்கல் உள்ளதா? அவ்வாறாயின், அதற்கான மாற்றுவழியொன்றை ஏற்பாடுசெய்து கொள்ளக்கூடியதாக உள்ளதா?

..........................................................................................................................................

..........................................................................................................................................

..........................................................................................................................................

6. வேறு விபரங்கள்:

..........................................................................................................................................

..........................................................................................................................................

7. கட்டடத்தைத் தகர்த்து அகற்றுவதற்கான அதிபரின் சிபார்சு:

..........................................................................................................................................

..........................................................................................................................................

..........................................................................................................................................

..............................  ..............................................

திகதி  அதிபரின் கையொப்பம்

(பதவி இலச்சினை)

## பகுதி II: வலயக் கல்விப் பணிப்பாளரின் சிபார்சு

தகர்த்து அகற்றப்படவுள்ள இக்கட்டடத்தை பிரத்தியேகமாக பரிட்சித்தேன் என்பதுடன், அதிபரினால் சமர்ப்பிக்கப்பட்ட மேற்சொன்ன தகவல்கள் சரியானவை என்பதை உறுதிப்படுத்துகின்றேன்.

தகர்த்து அகற்றுவதற்கு சிபார்சு செய்கின்றேன்/செய்யவில்லை.

சிபார்சு செய்யவில்லை எனில், அதற்கான காரணங்கள்

.......................................................................................................................................................

.......................................................................................................................................................

...................................... | ......................................................................
திகதி | வலயக் கல்விப் பணிப்பாளரின் கையொப்பம்

(பதவி இலச்சினை)

## பகுதி III: பிரதேச பாடசாலைக் கட்டடப் பொறியியலாளரின் அல்லது மாவட்டப் பொறியியலாளரின் அல்லது பிரதேச பொறியியலாளரின் சிபார்சு

1. அதிபரினாலும் வலயக் கல்விப் பணிப்பாளரினாலும் அனுப்பிவைக்கப்பட்டுள்ள மேலே குறிப்பிடப்பட்ட தகவல்களை நான் ஆராய்ந்தேன். அதன்படி, இக்கட்டடத்தைத் தகர்த்து அகற்றுவதற்கு சிபார்சு செய்கின்றேன்/ செய்யவில்லை.

2. கட்டடத்தைத் தகர்த்து அகற்றுவதற்கு சிபார்சு செய்வதாயின், பின்வரும் தகவல்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

2.1 நிலைவர அறிக்கை.

2.2 கட்டடத்தைத் தகர்த்து அகற்றுவதற்கு ஏற்படும் செலவு ரூ............... (விபரத்தை உட்படுத்தவும்)

2.3 கட்டடப் பொருள்களின் மதிப்பீட்டுப் பெறுமதி ரூ................ (விபரத்தை உட்படுத்தவும்)

2.4 மேலே 2.2. மற்றும் 2.3 இடையிலான வித்தியாசம் ரூ..................

2.5 பாடசாலை வளவில் கட்டடத்தின் அமைவிடத்தைக் காட்டும் மாதிரி வரைபடம்.

மேலே குறிப்பிடப்பட்ட ஆவணங்களை இத்துடன் சமர்ப்பிக்கின்றேன். இக்கட்டடத்தை தகர்த்து அகற்றுவதற்கு நான் சிபார்சு செய்கின்றேன் / செய்யவில்லை.

சிபார்சு செய்யவில்லை எனில், அதற்கான காரணங்கள்: -

.......................................................................................................................................................

.......................................................................................................................................................

...................................... | ......................................................................
திகதி | பாடசாலை கட்டடப் பொறியியலாளர்/<br>மாவட்டப் பொறியியலாளர்/<br>பிரதேசப் பொறியியலாளர்

(பதவி இலச்சினை)

## பகுதி IV: மாகாணக் கல்விப் பணிப்பாளரின் சிபார்சு

செயலாளர்,
கல்வி அமைச்சு

மேற்சொன்ன கட்டடத்தைத் தகர்த்து அகற்றுவது சம்பந்தமான பின்வரும் ஆவணங்கள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன

1. தகுநிலை அறிக்கை.
2. கட்டடத்தைத் தகர்த்து அகற்றுவதற்கான செலவின மதிப்பீடு.
3. கட்டடப் பொருள்களின் மதிப்பீட்டுப் பெறுமதி.
4. பாடசாலை வளவில் கட்டடத்தின் அமைவிடத்தைக் காட்டும் மாதிரி வரைபடம்.

இக்கட்டடத்தைத் தகர்த்து அகற்றுவதற்கு நான் சிபார்சு செய்கின்றேன் / செய்யவில்லை.

**சிபார்சு செய்யவில்லை எனில், அதற்கான காரணங்கள்:**

..........................................................................................................................................

..........................................................................................................................................

..........................................................................................................................................

..........................................................................................................................................

...............................
திகதி

...............................
மாகாணக் கல்விப் பணிப்பாளர்

*(பதவி இலச்சினை)*

## பகுதி V: கல்விச் செயலாளரின் அனுமதி

மாகாணக் கல்விப் பணிப்பாளர்,

...............................

கட்டடத்தைத் தகர்த்து அகற்றுவதற்கு அனுமதி அளிக்கின்றேன் / அளிக்கவில்லை.

...............................
திகதி

...............................
செயலாளர்
கல்வி அமைச்சு

*(பதவி இலச்சினை)*